(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2024

**வணிகக் கல்வி**
**Business Studies**

Three Hours

Gr. 12 (2024)

32 T I

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :-**

- **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**
**வினாத்தாள் I இற்கானது**

| வினா இல | புள்ளிகள் |
|---|---|
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

- ***01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

*01)* வணிகப் பரம்பல் தொடர்பாக ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு

அமல் :- மிகை உற்பத்தியினை மற்றுமொரு மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் பண்டமாற்று ஆகும்.

கமல் :- மிகை உற்பத்தி காரணமாக சிறப்புத் தேர்ச்சி ஏற்படுகின்றது.

விமல் :- பண்டமாற்று முறையே வணிகப் பரம்பலின் முதலாவது படியாகும்.

ராஜா :- பண்டமாற்றின் குறைபாடே நேரில் உற்பத்திக்கு வித்திட்டது.

சுரேஸ் :- சமகால இலத்திரனியல் வணிகத்தின் ஆரம்பம் பண்டமாற்று ஆகும்.

மேற்படி மாணவர்களின் கூற்றுக்கமைய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) அமல், கமல், விமல்
(2) அமல், விமல், சுரேஸ்
(3) அமல், கமல், ராஜா
(4) கமல், விமல், ராஜா
(5) விமல், ராஜா, சுரேஸ் (.........)

*02)* பொருளாதார வாழ் தன்மைக்கு வணிகம் பங்களிப்புச் செய்யும் முறையொன்றாகக் கருத முடியாதது எது?

(1) சூழலுக்கு நேய உற்பத்திப் பொருட்களை வழங்குதல்
(2) புத்தாக்கத்தில் ஈடுபடுதல்
(3) மாற்றமடையும் சிக்கலான விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்
(4) தேசிய பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்
(5) தொழில்வாய்ப்புக்களை ஊக்குவித்தல் (.........)

03) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியும், சமூக நிலைபேறான அபிவிருத்தியும் ஒருங்கிசைவதன் மூலம் உருவாகுவது
(1) ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை
(2) வாழக்கூடிய நிலை
(3) சமத்துவ நிலை
(4) புத்தாக்க நிலை
(5) இடர்களைத் தாங்குதல் (.........)

04) பின்வருவன நாணயக் கொள்கை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியில் பயன்படுத்தும் கருவிகள் ஆகும்.

A - வங்கி வீதம்
B - நியதி ஒதுக்கு வீதம்
C - பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள்
D - மரபு ரீதியான கட்டுப்பாட்டுக் கருவிகள்
E - தார்மீக வேண்டுகோள்
F - கொள்கை வட்டி வீதங்கள்
G - சலுகைக் கடன் திட்டங்கள்

மேலே கூறப்பட்டவற்றில் இருந்து 2023 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்திற்கு அமைவாக பணவீக்கக் கட்டுப்பாடு தொடர்பில் பயன்படுத்தும் பிரதான கருவிகளைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A, B, C (2) A, C, F (3) B, C, F (4) B, E, F (5) D, F, G (.........)

05) வணிக அமைப்புக்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) பொதுக்கம்பனிகள் பங்குதாரர்களுக்கு பங்கு இலாபம் வழங்கும் போது கடன் தீர்க்கும் நிலை பற்றிய சோதனை அவசியம்.
(2) பட்டியல்படுத்தப்பட்ட பொதுக் கம்பனிகள் மட்டுமே கொழும்புப் பங்குபரிமாற்றகத்தினூடாக பங்குகளை விற்பனை செய்ய முடியும்.
(3) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தனிஉடமை, பங்குடமை வணிகங்கள் மாகாணசபைப் பெயர்ப்பதிவாளரிடம் பதிவு செய்யப்படும்.
(4) பிணையங்களால் பொறுப்பு வரையறுத்த கம்பனிகள் தொடர்பில் ஆகக்குறைந்த பங்குதாரர்களின் எண்ணிக்கை இரண்டு பேர்.
(5) வரையறுத்த சொந்தக் கம்பனிகள் தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்க முடியாது. (.........)

06) அஸ்வின் என்பவர் மோட்டார் வாகனங்கள் மீது அதிக ஆர்வம் கொண்டவர் இவர் தனது தொடர்ச்சியான ஆராய்ச்சியின் மூலம் சூரியகலத்தில் இயங்கக் கூடிய புதிய ரக மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கண்டுபிடித்தார். இவர் தனது அர்ப்பணிப்பான செயற்பாட்டின் மூலமும் தன்னம்பிக்கையின் மூலமும் குறித்த மோட்டார் சைக்கிளை இலங்கை முழுவதும் சந்தைப்படுத்தத் தீர்மானித்து இடர்களை ஏற்பதற்கும் தயாரானார்.
மேற்குறித்த சம்பவத்தில் கூறப்பட்ட முயற்சியாண்மையின் பொதுவான பண்புகளின் எண்ணிக்கை யாது?
(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7 (.........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

07) பின்வரும் அட்டவணையானது இலங்கையில் தொழிற்படும் வணிக அமைப்புக்கள் சிலவற்றினையும் அதற்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| வணிக அமைப்புக்கள் | உதாரணம் |
|---|---|
| 1. பங்குடமை | A. Sri Lanka Telecom |
| 2. பட்டியல்படுத்தப்பட்ட பொதுக்கம்பனி | B. Sampath Bank PLC Ltd. |
| 3. கூட்டுத்தாபனம் | C. சிவா அன் கொம்பனி |
| 4. அரச கம்பனி | D. இலங்கை வங்கி |

மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பில் வணிக அமைப்புகளுக்கு ஏற்ப உதாரணங்களைச் சரியான ஒழுங்கில் கூறுவது

(1) A D B C (2) A C D B (3) B D A C (4) C A D B (5) C B D A (.........)

08) சிறு வணிகங்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தும் நியதிகள் சில கீழே தரப்பட்டுள்ளது.

A - மூலதனம்
B - வணிக அமைப்பு முறை
C - மின் சக்தியின் அளவு
D - விற்பனைப் புரள்வு
E - சந்தை அமைப்பு
F - நடைமுறை அல்லாச் சொத்துக்கள்
G - பயன்படுத்தும் தொழில்நுட்பம்
H - வணிகத்தின் தன்மை

மேலே தரப்பட்டவற்றில் சிறு வணிகங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படும் பண்புசார் நியதிகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, D, H (2) A, C, D, G (3) B, C, E, G (4) B, C, F, H (5) C, F, G, H (.........)

09) குமரன் என்பவர் நவீன வடிவங்களிலாலன கையடக்கத் தொலைபேசிகளுக்கான உறைகளை விற்பனை செய்யும் ஓர் வியாபாரி ஆவார். இவரிடம் இருந்து வள்ளி என்பவர் ரூபா 100 000 பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளின் உறைகளைக் கொள்வனவு செய்து உடனடியாக 60 000/= செலுத்தியதுடன் மிகுதியை இரு சம தவணைகளில் செலுத்துவதற்கு உடன்பட்டார். கீழே தரப்பட்ட பணத்தின் தொழிற்பாடுகளில் மேலே குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பணத்தின் தொழிற்பாடுகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

A - பரிமாற்றூடகம்
B - பெறுமான அளவை
C - பெறுமானத் திரட்டு
D - பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவி

(1) A B C (2) A B D (3) B C (4) C D (5) B D (.........)

10) பின்வருவன மத்திய வங்கியின் தொழிற்பாடுகளில் சிலவாகும்.

A - பேராண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளைக் கடைப்பிடித்தல்.
B - இலங்கையின் நிதிசார் உட்சேர்க்கைகளை மேம்படுத்தல்.
C - நிதியியல் உளவறிதல் செயற்பாடுகள்.
D - ஊழியர் சேமலாப நிதியத்தை முகாமை செய்தல்.
E - நிதிசார் முறைமையின் உறுதியினை உறுதிப்படுத்துவதும் வழிவகையான வைப்புக் காப்புறுதித் திட்டத்தை ஸ்தாபித்தல்.
F - வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்.

மேலே கூறப்பட்டவற்றில் மத்திய வங்கியின் முகவராண்மைத் தொழிற்பாடுகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, D (2) A, E, F (3) B, C, E (4) B, C, F (5) C, E, F (.........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

11) பின்வருவனவற்றிலிருந்து காசோலைப் பயன்பாடு தொடர்பாக தவறான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) இலங்கையில் காசோலைப் பயன்பாடு வங்கித் தொழிற் சட்டத்திற்கு
(2) காசோலை ஒன்றின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்.
(3) பெறுவோன் கணக்கு மட்டும், கைமாறத்தகாதது என குறுக்குக் கோடிட்ட காசோலைகள் கட்டாயம் ஓர் நபரின் பெயரிலேயே அமைதல் வேண்டும்.
(4) காசோலை ஒன்றில் குறுக்குக் கோடுகளை நீக்கும் அதிகாரம் வரையுணருக்கு மட்டும் காணப்படும்.
(5) அரச காசோலை ஒன்றின் செல்லுபடிக் காலம் 30 நாட்கள் ஆகும். (.........)

12) பின்வருவன வணிகம் ஒன்றில் ஏற்படக் கூடிய இடர்களாகும்.

A - வடிவமைப்பு மாற்றங்களால் ஏற்பட்ட இழப்புக்கள்
B - விநியோக வான் விபத்துக்குள்ளாதல்
C - கடன்பட்டோர் ஒருவர் முடிவடைந்து விட்டதாக அறிவித்தல்
D - முகாமைத் தீர்மானத்தினால் சந்தை நட்டமடைதல்
E - வணிக்கக் கட்டடத்தில் இருப்பிலான பாகங்கள் துருப்பிடித்தல்
F - வணிகத்தின் உரிமையாளர் மாரடைப்பால் மரணமடைதல்

மேற்கூறிய இடர்களில் இருந்து காப்புறுதிப் பாதுகாப்பினை ஏற்படுத்த முடியாத இடர்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B (2) C, E (3) A, D, E (4) C, E, F (5) F மட்டும் (.........)

13) பின்வருவனவற்றுள் சமிக்ஞை மற்றும் குறியீட்டு ஊடகங்கள் மூலமான தொடர்பாடலின் பிரதிகூலமாகக் கருத முடியாதது

(1) பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு தகவல் வழங்குவதில் சிக்கல் தன்மைகள் காணப்படல்.
(2) குறியீடுகள் திரிவுபடுத்தப்படுவதனால் தகவல்களை பிழையாக விளங்குதல்.
(3) எல்லா சமிக்ஞைகளையும் விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படல்.
(4) சமிக்ஞைகளையும் குறியீடுகளையும் விளங்கிக் கொள்வதற்கு முன்னறிவு அவசியம். (.........)
(5) தகவல்கள் சுருக்கமானதாக இருத்தல்.

14) மூன்றாம் தரப்பு ஏற்பட்டியல் என்பதன் கருத்து பின்வருவனவற்றுள் எது?

(1) மூலப்பொருட்கள் வழங்குனரிடம் இருந்து உற்பத்திச் செயன்முறை வரையிலான அசைவுகள்
(2) முடிவுப் பொருட்கள் நுகர்வோருக்கு கிடைக்கும் வரையிலான அசைவுகள்
(3) மூலப் பொருட்களைப் பெறுவதில் சிக்கல் நிறைந்தவையாக இருத்தல்.
(4) முடிவுப் பொருட்களை வழங்குவதில் சிக்கல் நிறைந்தவையாக இருத்தல்.
(5) வியாபார நடவடிக்கைகளை வெளியாருக்குப் பெற்றுக் கொடுத்தல். (.........)

15) வியாபாரத்தில் இடைநடுவர்களைப் பயன்படுத்துவதன் நன்மையாக அமையாதது எது?

(1) பல்வேறு உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு
(2) பொருட்களின் விலை மட்டங்கள் உயர்வடைவதற்கு வாய்ப்பாக இருத்தல்.
(3) புதிய பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவானதாக இருத்தல்.
(4) இலகுவாகப் பரிமாற்ற செயன்முறை இடம் பெறல்.
(5) சந்தைத் தகவல்கள் உரிய பிரிவினருக்கு பரிமாற்றப்படுதல் இலகுவானதாக இருத்தல்.(.........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

➢ ***16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளை தரப்பட்ட இடைவெளிகளில் எழுதுக.***

*16)* அ) மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ........................................................................ சக்தியுடன் கூடிய விருப்பம் ............................................................. ஆகும்.

ஆ) நிறுவனம் ஒன்றில் எதிர்கால சந்ததிக்காக ஒப்படைக்கப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், மனப்பாங்குகள் என்பன ............................................................................ என அழைக்கப்படுவதுடன் அவற்றினை ஊழியர்கள் மதித்து செயற்படுதல் நிறுவனத்திற்கு ........................................................ ஆகும்.

*17)* அ) உற்பத்தி நிறுவனம் ஒன்று உற்பத்திச் செயன்முறையில் கலப்படங்களை மேற்கொள்ளக் கூடாது என்பது .................................................................................. தொடர்பான ஒழுக்க நெறியாக அமைவதுடன் விளம்பரங்களை மேற்கொள்ளும் போது போலியான உத்தரவாதங்களை வழங்கக் கூடாது என்பது ..................................................................................... தொடர்பான ஒழுக்க நெறியாகவும் கருதப்படும்.

ஆ) தனிநபர் வருமானங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி ................................................................. திணைக்களத்தால் அறவிடப்படுவதுடன் இது ........................................................................ அரசின் கீழ் தொழிற்படுகின்றது.

*18)* அ) இலங்கையில் கூட்டுறவு வணிகங்களின் கணக்கேடுகள் ......................................................................... திணைக்களத்தால் நியமிக்கப்படும் ...................................................................... மூலம் கட்டாயக் கணக்காய்வுக்கு உட்படுதத்ப்படும்.

ஆ) இயற்கைச் சூழலுக்கு நேரான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்படும் புத்தாக்கம் ...................................................................... முயற்சியாண்மை எனக் கருதப்படுவதுடன் அமைப்புக்களின் பிரதான பதவிகளில் கருமமாற்றும் தனிநபர்களின் ஆக்க ரீதியான செயற்பாடு ...................................................................... முயற்சியாண்மை எனவும் கருதப்படும்.

*19)* அ) 2023 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்திற்கு அமைய நாணய சபையின் கீழ் தொழிற்படும் இரண்டு பிரதான சபைகளாக ........................................................................................, ......................................................................... காணப்படுகின்றது.

ஆ) கடல்பாயக் காப்புறுதியின் இரண்டு வகைகளாக ........................................................................., .................................................................................. காணப்படுகின்றது.

*20)* அ) முதல்வர் சார்பாகப் பொருட்களை கடனுக்கு விற்பனை செய்து அக்கடன் பணத்தை அறவிடுவதனை தன் கடமையாகக் கொண்டு தொழிற்படும் இடைநிலையிலாளர் ......................................................................................... என அழைக்கப்படுவதுடன் அவர் சேவைக்காக ....................................................................... வழங்கப்படும்.

ஆ) இறக்குமதியாளர் நாட்டின் வேண்டுகோளின்படி ஏற்றுமதி செய்யப்படும் விவசாய உற்பத்திகளின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தி ............................................... சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சுங்கத்தினால் பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்தி ................................................................... சீட்டும் வழங்கப்படும்.

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

➢ ***21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தரப்பட்ட இடைவெளிகளில் எழுதுக.***

*21)* வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் பொதுச் சமூகத்திற்கும் அழுத்தத்தை ஏற்படுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

*1.* ..........................................................................................

*2.* ..........................................................................................

*3.* ..........................................................................................

*4.* ..........................................................................................

*22)* நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*1.* ..........................................................................................

*2.* ..........................................................................................

*3.* ..........................................................................................

*4.* ..........................................................................................

*23)* தன்னியக்க வங்கிச் சேவையின் மூலம் வங்கிக்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

*1.* ..........................................................................................

*2.* ..........................................................................................

*3.* ..........................................................................................

*4.* ..........................................................................................

*24)* பொறுப்புக் காப்புறுதி என்பதனுள் உள்ளடக்கப்படும் காப்புறுதி வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

*1.* ..........................................................................................

*2.* ..........................................................................................

*3.* ..........................................................................................

*4.* ..........................................................................................


*25)* களஞ்சியசாலையில் பொருட்களை இடத்திற்கிடம் மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளின் படங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.



A



B



C



D

A: ..........................................................  C: ..........................................................

B: ..........................................................  D: ..........................................................

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2024

**வணிகக் கல்வி**
**Business Studies**

Gr. 12 (2024) | 32 | T | II

**அறிவுறுத்தல்கள் :-**

- **பிரிவு "அ", பிரிவு "ஆ"** பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- எல்லா வினாக்களுக்கும் **பத்து** புள்ளிகள் வழங்கப்படும்.

### பிரிவு "அ"

01) சுதன் என்பவர் ஓர் விவசாய விஞ்ஞானப் பட்டதாரி ஆவார். இவர் தான் கற்ற கல்வியினை பிரயோக ரீதியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற வகையில் விவசாயியான தனது தந்தைக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் நிலத்தில் தந்தையுடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டார். இவர் தனது அறிவாற்றல் மூலம் கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழுக்கள் மூலம் சேதனப் பசளை தயாரிப்பதுடன் இயற்கையான கிருமி நாசினிகளையும் பயன்படுத்தி தனது விவசாயத்தைத் தொடர்ந்தார். இவரது விவசாய விளைச்சல் அமோகமாக இருந்தது. இவர் தனது வரு விளைவுகளை உள்நாட்டிலும் விற்பனை செய்வதுடன் ஓர் பகுதியை பதனிட்டு வெளிச்சுட்டிக்கு ஏற்றுமதி செய்தார். இதனால் இவருடைய விற்பனை, இலாபம் என்பன அதிகரித்தது. இவர் தனது வணிகத்தை மேலும் விரிவுபடுத்த எண்ணி தனது இரண்டு நண்பர்களைப் பணிக்கமர்த்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் வேளையில் இவரது உற்பத்திகளை கேள்வி அதிகரித்து நிரல்நிலை ஊடாகவும் கொள்வனவுக் கட்டளைகள் பெறப்படுகின்றது.

(i) அ) மேலுள்ள விடய ஆய்வில் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை ஒன்றினையும் விருப்பம் ஒன்றினையும் குறிப்பிடுக.

ஆ) மேற்குறித்த வணிகத்தின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) அ) சுதன் தனது வணிகம் தொடர்பில் சூழல் தொடர்பாக சமூகப் பொறுப்பினை பேணுவதற்கான எடுத்துக் காட்டுக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சுதனின் வணிகத்தால் நிறைவேற்றப்படும் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iii) சுதனின் வணிகம் வெற்றியளித்தமைக்கான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iv) சுதனின் வணிகத்தினை பின்வரும் அடிப்படையில் எதனுள் உள்ளடக்குவீர்?

(1) உற்பத்தியின் தன்மை (2) உற்பத்தித் துறை

(3) உரிமை (4) நோக்கம் ($\frac{1}{2} \times 4 = 2$ புள்ளிகள்)

(v) நிகழ்நிலை ஊடாக வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் சுதன் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை

02) (i) அ) வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) உரிமையாளர் தொடர்பான வணிகத்தினால் நிறைவேற்ற சமூகப் பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) அ) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சூழல் நிலைபேறான பாதுகாப்பினை ஏற்படுத்தும் போது வணிகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) அரசின் பேரினப் பொருளாதார நோக்கங்கள் நான்கினையும் அவற்றினை அடைந்து கொள்வதற்கான வணிகத்தின் பங்களிப்புக்களையும் குறிப்பிடுக. ($\frac{1}{2} \times 4$ புள்ளிகள்)

(iv) நாணயக்கொள்கை என்பதனை வரையறுத்து இலங்கை மத்திய வங்கியால் தற்போது நடைமுறைப்படுத்தும் பிரதான நாணயக் கொள்கைக் கருவிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(v) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் நான்கினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

03) சுரேஸ் என்பவர் 10 ஆண்டுகளாக சுவிஸ் நாட்டில் பணிபுரிந்து நாடு திரும்பியுள்ளார். இவர் தான் உழைத்த 5 மில்லியன் பணத்தைப் பயன்படுத்தி தனது மனைவியின் பெயரில் உசா களஞ்சியம் என்னும் பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்து செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இவர் புடவைகளை கொள்வனவு செய்து விற்பனை செய்வதனை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றார். பின்னர் புடவை வியாபாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த பாலா என்பவரையும் இணைத்து தனது வணிகத்தை விரிவுபடுத்தி செல்வா அன்கோ எனும் பெயரில் நடாத்தி வருகின்றனர்.

(i) அ) மேலே கூறப்பட்ட நிகழ்வுக் கற்கையில் குறிப்பிடப்பட்ட முதலாவது வணிகம் எத்துறையை சார்ந்தது.

ஆ) அவ் வணிகத்தை கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமா? காரணம் தருக.

(2 புள்ளிகள்)

(ii) அ) முதலாவது வணிகத்தை பதிவு செய்ய வேண்டுமாயின் எந்தச் சட்டத்தின் கீழ் எங்கு பதிவு செய்ய வேண்டும்?

ஆ) அப்பதிவினை மேற்கொள்ளும் போது சமர்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) உசா வணிகத்தை செல்வா அன்கோ என மாற்றுவதன் அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் தருக.

(2 புள்ளிகள்)

(iv) அ) செல்வா அன்கோவின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் குறித்த வணிகத்தை எவ்வணிகமாக மாற்றம் செய்தல் வேண்டும்?

ஆ) அவ்வாறு மாற்றம் செய்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை?

(v) உத்தர விதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

## "ஆ" பகுதி

04) (i) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கு புத்தாக்கங்கள் இன்றியமையாதவை ஆகும்.

அ) முயற்சியாண்மைக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

ஆ) முயற்சியாண்மையின் போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) முயற்சியாண்மையின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) அ) முயற்சியாண்மை செயன்முறைகளைப் படிமுறை ஒழுங்கில் தருக.

ஆ) முயற்சியாளரின் பண்புகள் நான்கினைத் தருக. (2 புள்ளிகள்)

(iv) "இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மூலதனப் பற்றாக்குறை, தொழிநுட்ப பற்றாக்குறைகள் போன்றவற்றினால் பாரிய வணிகங்களை உருவாக்குவதில் சிக்கல்கள் காணப்படுகின்றது."

அ) சிறு வணிகங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படும் பண்புசார் காரணிகள் நான்கு தருக.

ஆ) சிறு வணிகத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(v) ராஜா என்பவர் தன்னிடமுள்ள ரூபா 500 000/= ஐ பயன்படுத்தி ஓர் சிறிய வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகிறார். இவர் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

05) (i) "பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படும் பரிமாற்று ஊடகம் பணம் ஆகும்"

அ) பணத்தின் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) கரன் என்பவர் 100 000/= பெறுமதியான கையடக்க தொலைபேசி ஒன்றினை அரைவாசிப் பெறுமதியை தனது சேமிப்பில் இருந்து உடனடியாகச் செலுத்தி மிகுதியை இரண்டு வாரங்களில் செலுத்துவதாக உடன்பட்டார் மேற்குறித்த சம்பவத்தில் காணப்படும் பணத்தின் தொழிற்பாடுகளை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) அ) 2023ம் ஆண்டு 16ம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்படி பிரதான நோக்கத்தினையும் ஏனைய நோக்கத்தினையும் குறிப்பிடுக.
பிரதான நோக்கம்
ஏனைய நோக்கம்
ஆ) நடைமுறை வைப்பிடும் சேமிப்பு வைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) குத்தகை அடிப்படையில் நடைமுறை அல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

(iv) அ) காப்புறு.... இடர் என்பதை வரையறுக்குக.
ஆ) காப்புறுத்தக்கூடிய இடர்களின் பண்புகளை நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(v) ஆயுள் காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிக்குமான வேறுபாடுகள் நான்கினை குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

06) (i) "ஒரு பிரிவினரிடம் இருந்து இன்னொரு பிரிவினர்களுக்கு தகவல்கள் எண்ணங்கள், செய்திகள் என்பன பரிமாற்றப்படுதல் தொடர்பாடல் ஆகும்"
அ) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) செய்தி ஒன்றைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) புகையிரதப் போக்குவரத்து முறையில் காணப்படக்கூடிய பலவீனங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) "களஞ்சியப்படுத்தல் என்பது பொருட்களைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலிருந்து அவை நுகரப்படும் வரையில் அல்லது வினையோகிக்கும் வரையில் பாதுகாத்தல் என்பதனைக் கருதும்.
அ) களஞ்சியப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்குமுறையில் தருக.
ஆ) களஞ்சிய கலை என்பதனை வரையறுக்குக. (2 புள்ளிகள்)

(iv) ஏற்பாட்டியலின் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(v) "பெறுமதி அடிப்படையில் உற்பத்திப் பொருட்களின் உரிமையினை ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு கைமாற்றம் செய்தல் வியாபாரம் ஆகும்"
அ) சில்லறை வியாபாரத்தின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) சர்வதேச வியாபாரத்தின் போதாக தீர்வையற்ற தடைகள் நான்கினைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)